# வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண்.41

மானியக் கோரிக்கை எண்.51

## அறிவிப்புகள்
## 2014–2015

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்

## 1. 3,00,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் **2014–15** ஆம் நிதியாண்டில் **3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள்** வழங்கப்படும்.

## 2. கிராம நிருவாக அலுவலர்களுக்கு வருவாய் உதவியாளர்களாக வழங்கப்பட்டு வரும் பதவி உயர்வை 10 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** தமிழ்நாட்டில் **12,614** கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் உள்ளன. கிராம நிருவாக அலுவலர்களுக்கு வருவாய் உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்குவதற்காக **10** விழுக்காடு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர்களின் களப்பணி அனுபவத்தை கருத்தில் கொண்டு அவர்களுடைய பணியை மாவட்ட, வட்ட அலுவலகத்தில் பயன்படுத்தும் வண்ணம் தற்போதுள்ள பணித் தகுதியில் வருவாய் உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு **10** ஆண்டுகள் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தி **8 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு, வருவாய் உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படும்.** மேலும் தற்போதுள்ள பதவி உயர்வு **10** விழுக்காட்டிலிருந்து **30 விழுக்காடாக** உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** தற்போது ஓய்வூதியம் பெறும் **3,672** முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் ரூ.**1,500** லிருந்து **ரூ.2,000 ஆகவும்,** குடும்ப ஓய்வூதியம் பெறும் **852** முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.**1,000** லிருந்து **ரூ.1,500 ஆகவும்** உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் **2** கோடியே **71** இலட்சம் தொடர் செலவினம் ஏற்படும்.

## 4. கிராம நிருவாக அலுவலர்கள் பணியிடங்களை நிரப்புதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 01.04.2014** அன்றைய நிலவரப்படி காலியாக உள்ள **2,944** கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களையும் **2014–15** ஆம் ஆண்டில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. கிராம நிருவாக அலுவலர் பதவியில் காலியாக உள்ள பணியிடங்களில் 20 விழுக்காடு கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்து நிரப்புதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று மற்றும் பத்து வருடங்கள் கிராம உதவியாளராகப் பணிமுடித்த தற்போது தகுதியாக உள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர் பதவியில் காலியாக உள்ள பணியிடங்களில் **20 விழுக்காடு பதவி உயர்வு அளித்து நிரப்பப்படும்.**

## 6. அலுவலகக் கட்டடங்கள் புனரமைத்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நடப்பு ஆண்டு **2014–2015** இல் **3,000** கிராம நிருவாக அலுவலர்களின் அலுவலகங்கள் தலா ரூ.**50,000** மதிப்பீட்டில் **ரூ.15 கோடி செலவில் புனரமைக்கப்படும்** மற்றும் **25** வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் **ரூபாய் 3 கோடியே 62 இலட்சம் செலவில் கட்டித்தரப்படும்.**

## 7. புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சேலம் மாவட்டத்தில் **ஆத்தூர்** வட்டாட்சியர் அலுவலகம், திருவாரூர் மாவட்டம் **வலங்கைமான்** மற்றும் **நீடாமங்கலம்** வட்டாட்சியர் அலுவலகங்கள், விருதுநகர் மாவட்டம் **சாத்தூர்** வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஈரோடு மாவட்டம் **பெருந்துறை** வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய 5 வட்டாட்சியர் அலுவலகங்கள் புதியதாக ரூபாய் 11 கோடியே 25 இலட்சம் செலவில் இந்த நிதியாண்டில் கட்டப்படும்.

## 8. மாவட்ட ஆட்சியர் அலுவலங்களில் நிலச்சீர்திருத்த பிரிவு உருவாக்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பொதுமக்கள் நிலச்சீர்திருத்தம் மற்றும் பூமிதான சட்டங்களின் கீழ் வரும் நிலங்கள் தொடர்பாக குறைகளை மாவட்ட அளவிலேயே தெரிவித்து அந்தந்த மாவட்டத்திலேயே விரைவாக நிவர்த்தி செய்து கொள்ளவும், நிலஒப்படை நடவடிக்கைகள் விரைந்து முடிக்கவும் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிலச்சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ள ஒரு பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பணியை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (நிலம்) அவர்களுக்கு வழங்கவும், கூடுதல் நேர்முக உதவியாளர்கள் (நிலம்) இல்லாத **16 மாவட்டங்களுக்கு புதிய துணை ஆட்சியர் பணியிடங்கள்** தற்பொழுது உள்ள **6** நிலச்சீர்திருத்த உதவி ஆணையர் அலுவலகத்திற்கு பதிலாக தோற்றுவிக்கவும் இந்நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9. நிலச்சீர்திருத்தம் மற்றும் பூமிதான நில ஆவணங்களை கணினிமயமாக்கி தமிழ் நிலத்தில் சேர்த்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நிலச்சீர்திருத்தம் மற்றும் பூமிதான சட்டங்களின் கீழ் உள்ள நில ஆவணங்கள் **2014–15** ஆம் நிதியாண்டில் கணினி மயமாக்கப்பட்டு **தமிழ் நிலத்தில்** சேர்க்கப்படும். இதன் மூலம் நிலச்சீர்திருத்தம் மற்றும் பூமிதான சட்டங்களின் கீழ் உள்ள நிலங்கள் பற்றிய விவரங்களை பொது மக்கள் எளிதாக தெரிந்து கொள்ள இயலும். இவ்வகையான மேம்படுத்தப்பட்ட துரித சேவையினை பொது மக்கள் உரிய நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 10. பட்டாவுடன் கணினி மயமாக்கப்பட்ட புல அளவு வரைபடங்கள் வழங்கல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நில உரிமையாளர்கள் உபயோகத்திற்காக ஏற்கனவே கணினி மூலம் 'அ பதிவேடு' நகல் மற்றும் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஆவணங்களுடன் புல அளவு வரைபடமும் (Field Measurement Sketch) கணினி மூலம் வழங்கும் திட்டத்தை திருச்சி மாவட்டம், **ஸ்ரீரங்கம்** வட்டத்திலும் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், **பெரம்பலூர்** வட்டத்திலும் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும். பின்னர் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## 11. நகர்ப்புற நில ஆவணங்களை கணினி மயமாக்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பொதுமக்களுக்கு கணினி மூலமாக பட்டா வழங்குவதற்காக **2002** ஆம் ஆண்டு முதல் கிராமப்புற நில ஆவணங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, நில உரிமையாளர்களுக்கு கணினி பட்டா தற்போது வழங்கப்பட்டு வருகிறது. நகர்புறங்களிலும் கணினி மூலம் பட்டா வழங்குவதற்காக சென்ற ஆண்டு சென்னை மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு நில ஆவணங்களை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி நிறைவு பெற்றுள்ளது. இந்த நிதியாண்டில் மற்ற **மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலும் நகரளவை பணி முடிக்கப்பட்ட நகர்ப்புற நில ஆவணங்களை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.**

## 12. கிராம / வட்ட / மாவட்ட வரைபடங்கள் தமிழ் மொழியில் தயாரித்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, நில ஆவணங்களை கணினிமயமாக்க கிராம/வட்ட/மாவட்ட வரைபடங்கள் ஒளிபிம்பங்களாக (Scan) நகல் எடுத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றை முதன்முறையாக தமிழ் மொழியில் தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில், இவ்வரைபடங்களை கணினி மூலம் வரைந்து (Digitization) தமிழில் தயாரிக்கும் பணி இந்நிதியாண்டில் துவங்கப்படும்.

## 13. நில அளவைப் பணியாளர்களுக்கு நில அளவைக் கருவிகள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பொதுமக்களுக்கு நில அளவைப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வகை செய்யும் நோக்கத்துடன், நில அளவை புலப் பணியாளர்களுக்கு நில அளவைக் கருவிகளான சங்கிலிகள், நேர்கோண கட்டைகள் மற்றும் நில அளவை குத்தூசிகள் போன்றவை **ரூபாய் 30 லட்சம் செலவில் புதியதாக வழங்கப்படும்.**

## 14. கன்னியாகுமரி மாவட்டத்தில் நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு கிராமப்புறங்களில் மறு நில அளவை செய்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நகர்புறங்களில் 6 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் நவீன நகர நில அளவை பணி நடைபெற்று வருகிறது. கிராமங்களில் உள்ள நில உரிமையாளர்களுக்கு துல்லியமான, கணினிமயமாக்கப்பட்ட நில ஆவணங்களை வழங்கும் பொருட்டு, நவீன நில அளவை கருவிகளான ஜி.ப்பி.எஸ். (Global Positioning System) மற்றும் இ.டி.எஸ். (Electronic Total Station) ஆகியவற்றைக் கொண்டு கிராமப்புறங்களிலும் மறு நில அளவைப் பணி துவங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்த மறு நில அளவைப் பணி முதற்கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டத்தில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்கான செலவின மதிப்பீடு ரூபாய் 1 கோடி ஆகும்.

## 15. வருவாய்த்துறை அலுவலர்களுக்கான புதிய வாகனங்கள் ஒதுக்கீடு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் இதர வருவாய் அலுவலர்களுக்கு தங்களுடைய பணிகளை செம்மையாக செயல்படுத்துவதற்கு 28 வாகனங்கள் இந்த நிதியாண்டில் ரூபாய் 2 கோடியே 7 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 16. நில அளவைப் பணியாளர்களுக்கு சிம்கார்டு இணைப்பு வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பட்டா மாற்றம் பணி தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள ஏதுவாக குறுவட்ட அளவர்களுக்கு பி.எஸ்.என்.எல். சி.யூ.ஜி. (BSNL CUG) திட்டத்தின் கீழ் கடந்த **2013–14** நிதி ஆண்டில் சிம் கார்டுகள் வழங்கப்பட்டன. அத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி, தகவல் தொடர்பை எளிதாக்கும் வகையில் இதுவரை சிம் கார்டுகள் வழங்கப்படாத நிலஅளவை துறையின் ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு **600** சிம் கார்டுகள் ரூபாய் **8** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 17. வருவாய் நிருவாக ஆணையரகத்தில் சட்ட ஆலோசகர் பணியிடம் ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, வருவாய் நிருவாக ஆணையரகத்தில் மாவட்ட வருவாய் அலகுகளில் பணியாற்றும் பணியாளர்களின் கோரிக்கைகள் பல்வேறு சட்டப்பிரிவுகளில் மேல்முறையீடுகள் அது தொடர்பான நீதிமன்ற வழக்குகள் அதிக அளவில் உள்ளபடியாலும், நில நிருவாக ஆணையரகம் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையரகம் ஆகிய அலுவலகங்களில் உள்ள நிலம் சம்மந்தமான வழக்கு சார்ந்த கோப்புகளில் ஆலோசனை வழங்குவதற்கும் வருவாய் நிருவாக ஆணையரகத்திற்கு ஒரு சட்ட ஆலோசகர் பணியிடம் ஒன்று இந்த நிதியாண்டில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ.6 இலட்சம் செலவாகும்.

## 18. மாவட்ட பேரிடர் மேலாண்மை பணிக்காக புதிய பணியிடங்கள் உருவாக்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** தமிழக அரசு மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களை தோற்றுவித்துள்ளது. இவ்வாணையத்தின் பணிகளை செயல்படுத்தவும் பேரிடர் மேலாண்மை தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கு பல்வேறு ஒருங்கிணைப்பு பணியை மேற்கொள்ளவும் **அனைத்து 32 மாவட்டங்களிலும் வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) பணியிடங்கள் உருவாக்கப்படும்.** தற்போது 12 கடலோர மாவட்டங்களில் இயங்கி வரும் வட்டாட்சியர் (சுனாமி) பணியிடங்களை வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) என பெயர் மாற்றம் செய்தும், பிற 20 மாவட்டங்களிலும்

புதியதாக பணியிடங்களை உருவாக்கியும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பேரிடர் மேலாண்மை பிரிவு ரூபாய் **4** கோடியே **15** இலட்சம் செலவில் நடப்பாண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்

அரசு மைய அச்சகம், சென்னை–600 079